**I.D.O.P. No. 290/2022**

**19.10.2023**

ம.த.சா. 1- திருமதி. விஜி, த/பெ. ஜெகந்நாதன்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை .**

எனக்கு 2005ம் வருடம் திருமணம் நடைபெற்றது. நானும் எதிர்மனுதாரரும் காதலித்து பின்னிட்டு பெரியவர்களின் ஒப்புதல் உடன் எங்கள் திருமணம் நடைபெற்றது. எதிர்மனுதாரர் தான் முதலில் என்னை காதலிப்பதாக கூறினார். நான் சொல்வது தவறு என்றாலும் நான் தான் எதிர்மனுதாரரை வற்புறுத்தி திருமணம் செய்யக் கோரினேன் என்றாலும் சரியல்ல. எங்களுக்கு இரண்டு குழந்தைகள், ஒரு பெண் குழந்தை, ஒரு ஆண் குழந்தை. என் குழந்தைகள் இருவரும் தற்போது எதிர்மனுதாரருடன் தான் வசித்து வருகிறார்கள். நான் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றாலும் அதன்காரணமாகவே என் குழந்தைகள் எதிர்மனுதாரருடன் வசித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விசயங்களான 30 சவரன் நகைகள் மற்றும் சீர் பொருட்கள், இருசக்கர வாகனம் ஆகியவை எதிர்மனுதாரருக்கு திருமணத்தின்போது கொடுத்ததாக சொல்லியுள்ள விசயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. எனது திருமணத்தின்போது எனக்கு 5 சவரன் நகையும் எதிர்மனுதாரருக்கு 2 சவரன் நகை மட்டும் தான் எங்கள் வீட்டில் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 7 சவரன் நகையையும் நான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றபோது எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் சீர்வரிசை சாமான்கள் அனைத்தையும் நாங்கள் கடைசியாக வசித்த திருத்தணி வாடகை வீட்டிலிருந்து எனது பெற்றோர் வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள எதிர்மனுதாரருக்கு துர்காதேவியுடன் தகாத உறவு இருந்தது என்று வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றாலும் அது உண்மையல்ல என்று சொன்னாலும் சரியல்ல. அவ்வாறு உண்மையாக நடந்து இருந்தால் எனது

வழக்கறிஞர் அறிவிப்பிலேயே சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 2014 வரை எதிர்மனுதாரரின் பெற்றோர் உடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம். அவ்வாறு இல்லையென்றாலும் திருத்தணியில் நானும் எதிர்மனுதாரரும் தனியாக வாடகை வீட்டில் வசித்து வந்தோம் என்றாலும் அதன்காரணமாக எதிர்மனுதாரர் பெற்றோரின் தூண்டுதலில் என்னை கொடுமைப்படுத்தியதாக நான் சொல்லும் விவரம் தவறு என்றாலும் சரியல்ல. 2015 லேயே நான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து விட்டேன் என்றாலும் அதன்காரணமாக 2017ல் எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்புறுத்தி வெளியேற்றினார் என்று சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. ஜீலை 2019 ல் நான் திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அதில் காவல் துறையினர் எங்களை விசாரித்து சேர்ந்து வாழ அறிவுரை கூறினார்கள் என்றும் நான் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கூறிய புகார் மற்றும் ஏற்பு ரசீது ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால், அந்த புகார் நகல் மற்றும் ரசீது என் வசம் உள்ளது. அவ்வாறு நான் புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 15.11.2021 அன்று எதிர்மனுதாரருக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 08.12.2021 அன்று எதிர்மனுதாரர் எனது அறிவிப்பில் சொன்ன விவரத்தை மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு நிரந்தரமான வேலை இல்லை என்றால் சரிதான். ஆனால், எதிர்மனுதாரர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். முதலில் எதிர்மனுதாரர் ஜே.வி. promotors என்ற பெயரில் ரியல் எஸ்டேட் செய்தார். அவர் அவ்வாறு ரியல் எஸ்டேட் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் mediator பணி செய்து வருகிறார் என்றாலும் அவருக்கு மிகவும் சொற்ப வருமானம் தான் கிடைக்கும் என்று சொன்னாலும் சரியல்ல. 2012 செப்டம்பர் மாதத்தில் வேலஞ்சேரியை சேர்ந்த சீனு (எ) அறிவழகன் என்னை மிரட்டி பணம் கேட்டதாக எனது தாயாரிடம் நான் சொல்லி எனது தாயார் சீனு மீது திருத்தணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த புகாரின்பேரில் என்னையும் எதிர்மனுதாரரையும் சீனுவையும் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த பிரச்சனையில் காவல் நிலையத்தில்

என்னையும் சீனுவையும் எச்சரித்து அனுப்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த பிரச்சனைக்கு பிறகு எனது நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது என்றாலும் அதன்காரணமாக எதிர்மனுதாரர் என்னை அவர் சொந்த ஊரான கோரமங்கலத்திற்கு அழைத்து சென்றார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் சீனு (எ) அறிவழகனுக்கும் தகாத உறவு இருந்தது என்றாலும் அதன்காரணமாகவே எதிர்மனுதாரர் என்னை சொந்த ஊருக்கு அழைத்துச்சென்றார் என்றாலும் சரியல்ல. அதன்பிறகும் எனக்கும் சீனு (எ) அறிவழகனுக்கும் தகாத உறவு தொடர்ந்தது என்று சொன்னால் சரியல்ல. இந்த விவரம் எதிர்மனுதாரருக்கு தெரிந்த பிறகும் எதிர்மனுதாரர் குடும்ப நலன் கருதி என்னை எச்சரித்து என்னுடன் வாழ முற்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2015 பிப்ரவரியில் எதிர்மனுதாரருடன் நான் சண்டையிட்டு எனது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாக தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 06.04.2015 அன்று நான் சீனு (எ) அறிவழகனுடன் எனது தாயார் வீட்டை விட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 09.04.2015 அன்று எனது தாயார் மனோன்மணி என்னை காணவில்லை என்று திருத்தணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 14.04.2015 அன்று நானும் சீனு (எ) அறிவழகனும் திருத்தணி காவல் நிலையத்திற்கு வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. 14.04.2015 அன்று காவல் நிலையத்தில் சீனு (எ) அறிவழகனை எச்சரித்து அனுப்பினார்கள் என்றாலும் எதிர்மனுதாரரும் எனது தாயாரும் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றாலும் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ கோரி என்னை அழைத்துச்சென்று சேர்ந்து வாழ்ந்தார் என்று சொன்னாலும் சரியல்ல. 16.04.2015 அன்று நான் மீண்டும் சீனு (எ) அறிவழகனுடன் சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரும் நானும் கோரமங்கலத்தில் வசித்த போது வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் நான் குழந்தைகளை அடித்து, திட்டினேன் என்றாலும் அதன்காரணமாக ஊரில் உள்ளவர்களே என்னை வீட்டிற்கு வரக்கூடாது என்று கூறினார்கள் என்றாலும் சரியல்ல. ஜனவரி 2020 ல் எதிர்மனுதாரரின் தங்கையினுடைய செல்போன் நம்பருக்கு நான் எந்தவித புகைப்படமும் அனுப்பவில்லை. எதிர்மனுதாரரின் தங்கை உடனே என்னை தொடர்பு கொண்டு பேசினார் என்றாலும் அதற்கு நான் சீனு (எ) அறிவழகனை திருமணம் செய்து கொள்ள போவதாக கூறினேன் என்றாலும் சரியல்ல. நான் தகாத உறவுடன் இருந்து வருகிறேன் என்றாலும்

அதன்காரணமாகவே எதிர்மனுதாரரையும் குழந்தைகளையும் தொல்லைப்படுத்துகிறேன் என்றாலும் சரியல்ல. 09.04.2015 அன்று எனது தகப்பனார் எதிர்மனுதாரரிடம் ரூபாய் 1,50000/-க்கு இரண்டு சீட்டுக்கள் போட்டு ரூபாய் 3 லட்சத்தில் தலா ரூ.25,000/- மொத்தம் ஐம்பதாயிரம் ரூபாய் போக இரண்டரை லட்சத்தை எதிர்மனுதாரரிடம் நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் அது தவிர திருமணத்தின்போது கொடுத்த 7 சவரன் நகையையும் எடுத்து சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. 2015ல் எனது அண்ணனுக்கு திருமணம் நடந்தது. எதிர்மனுதாரரிடம் எனது தகப்பனார் இரண்டரை லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு திருப்பித்தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் திருமணத்திற்கு எதிர்மனுதாரர் 2 சவரன் நகை கொடுத்தார் என்றாலும் அதையும் நாங்கள் திருப்பி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரின் வீட்டில் எங்களது கட்டில், பீரோ, டிவி மட்டுமே உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நிக்கிதா என்ற பெயரில் பியூட்டி பார்லர் நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். அதன்மூலம் மாதம் ஒரு லட்ச ரூபாய் வருமானம் ஈட்டி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்பொழுதும் சீனு (எ) அறிவழகன் என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா மனு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.